பக்கங்கள் 8 ★

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 18 ஜூல்-கஜ் 24

யாழ்ப்பாண திங்கட்கிழமை 3-11-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-11-3
PERIODICALS
DIV'S. CI

## சிறிமா 22ம் திகதி யாழ். வருகிறார்

5 கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொள்வார்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இம்மாதம் 22-ம் திகதி யாழ்நகர் விஜயம் செய்... மூலம் யாழ். வரும் இவருடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பிக்கள், முன்னாள் அமைச்சர்கள், எம். பிக்கள் பலரும் வருவரென எதிர்பார்க்

(8-ம் பக்கம் பார்க்க)

★ பணயக்கைதிகள் நாடகத்தின் இறுதிக்கட்டம் இன்று!

# கொமெய்னியின் நிபந்தனைகள்

# கார்ட்டர் 'பச்சைவிளக்கு'?

## ராணுவ ஆயுதங்களை உடன் அனுப்பவும் இணக்கமாம்

(வாஷிங்டன்)

அமெரிக்க பணயக்கைதிகளை விடுதலைசெய்வதற்கு ஈரானியமதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தெரிவித்திருந்த யோசனைகளின் அடிப்படையில், விசேட ஆணைக்குழுவின் நான்கு நிபந்தனைகளையும் ஈரானிய பாராளுமன்றம் இன்று பெரும்பான்மைப்பலத்துடன் அங்கிகரித்தபோதிலும்; இந்த நிபந்தனைகளை அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் ஏற்றுக்கொண்டாரா இல்லையா என்பது இச் செய்தி அச்சுக்குப்போகும் வரை அறிவிக்கப்படவில்லை.

ஈரானிய பாராளுமன்றத்தின் அங்கீகாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி கார்ட்டர் தமது தேர்தல் பிரச்சாரத்தை இடைநிறுத்திவிட்டு, இன்று சிக்காக்கோவிலிருந்து வெள்ளைமாளிகை திரும்பினார்.

கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி நான்கு நிபந்தனைகள் குறித்தும் ஜனாதிபதி கார்ட்டர் வெள்ளைமாளிகையில் தமது ஆலோசகர்களுடன் அவசரக் கூட்டத்தை நடத்திவருகின்றார் என்றும் ஜனாதிபதியின் முடிவு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என்றும் அவரது முடிவு, பணயக் கைதிகளின் விடுதலைக்குச் சாதகமாகவே இருக்கும் என்றும் தெரியவருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, அமெரிக்க அதிபர் தனது இணக்கத்தை இரகசியமாக நேற்று அனுப்பி வைத்துள்ளதாக இங்கு வெளியான 'நியூஸ்வீக்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

● ஷாவின் சொத்துக்களை திருப்பித் தரவேண்டும்.

● பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும்.

● அமெரிக்காவில தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈரானியச் சொத்துக்களை திருப்பித் தர வேண்டும்.

● ஈரானின் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற அயத்தொல்லா கொமெய்னியின் நிபந்தனைகளையே திரு கார்ட்டர் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளாராம்.

4-ம்திகதிசெவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் திரு. கார்ட்டர் தமது வெற்றியை உறுதிப்படுத்தவே பணயக் கைதிகளை விடுதலை செய்ய முயன்று வருவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளையில் அமெரிக்கா இஸ்ரேலுக்குப் பதிலாக இராணுவ ஆயுதங்களை ஈரானுக்கு அனுப்பியதாக லண்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (கு)

"இளம் சந்ததியினர் அறியாதவகையில்

## தமிழ்மன்னர்களின்வரலாறு இருட்டடிப்பு!"

### பண்டாரவன்னியன் விழாவில் 'அமிர்'

(வவனியா)

"இன்று உலகில் வாழும் ஆறு கோடி தமிழ் மக்களுக்குச் சொந்தமாக ஒரு நாடு இல்லை; தனியாக ஒரு அரசு இல்லை. இந்த அவலநிலையை நீக்க புதிதாக மலரும் தமிழ்நாடு, ஈழத்தமிழ் நாடாகவே இருக்கும். இதற்காக வீரவரலாறு படைத்த பண்டாரவன்னியனின் நினைவு நாளான இன்று மக்கள் திடசங்கற்பம் எடுத்து அதற்காக உழைக்கவேண்டும்"

இவ்வாறு, நெடுங்கேணி கிராமஅபிவிருத்திச் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுதின விழாவில், எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார்

நெடுங்கேணி கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. வி. குகாராசா தலைமையில

(8-ம் பக்கம் பார்க்க)

25% வரை
வட்டி வழங்குகின்றோம்
இலங்கையில் மிகக்கூடிய கிளைகளையும்
40 வருட அனுபவத்தையும் உடைய
ஒரே தனியார்துறை நிதி நிறுவனம்
TFC
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191,-249/c, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம் – தொலைபேசி: 7680

மலாயன் கபே புதிய அமைப்புடன்
இன்று திங்கட்கிழமை மங்களகரமான ஆரம்பம்!
சுத்தம் சுவை மிகு சைவ உணவிற்கும், திகட்டாத தின் சுவைமிகு
சிற்றுண்டி வகைகளுக்கும்
உங்கள் நினைவில் நிறைந்த மலாயன் கபே ஸ்தாபனத்தார்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.
மலாயன் கபே
(யாழ்ப்பாணத்தின் பிரபல்யம்வாய்ந்த சைவ ஹோட்டல்)
36, 38, ... யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 224 / 47-ம் இலக்க நவீன வீடு வளவு (பரப்பு ஒன்றரை) அது வின்ஸர் தியேட்டர்,ராஜா தியேட்டர் ஆகியவற்றுக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் பொ. அம்பலவாணர் நகைக் கடைக்கு முன் ஒழுங்கையில் உள்ளது, தொடர்பு: சி இராசநாயகம், பிரசித்த நொத்தாரிஸ், அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 7247

கோண்டாவில் டிப்போவுக்கு நேரே முன்பாக 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். திருநாவுக்கரசு அன்ட் சன்ஸ் பலாலிரோட், கோண்டாவில். 7343

பதிவு செய்யப்படாத டெலிக்கா வான், சீர்திருத்திய (F)போட் வான் விற்பனைக்கு உண்டு. ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7603, 7699. (7194)

கோழிக்குஞ்சுகள் (விருத்து பருவம்) விற்பனைக்குண்டு ராதா மெஷின் கொம்பனி, 586, கண்டி ரோட், நெடுங்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். 7195

ஜேர்சாக் கன்றுகள், அசோகாக் கன்றுகள், தோடங்கன்றுகள், தேயிலை வெற்றுப்பெட்டிகள், முட்டைகள் என்பனவற்றை தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அன்னை இன்டஸ்ரீஸ் ஸ்ரோர்ஸ், செம்மா தெரு, [சுலைமான்கண்டு அருகாமையில்] யாழ்ப்பாணம் 7228

3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் உள்ள மேல்மாடிக் கட்டிடம் விற்பனைக்குண்டு. 1/1, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 7236

## தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள பலசரக்கு நிறுவனமொன்று, சகல தளபாடங்களுடன் வியாபாரத்திற்கு கொடுக்கப்படவுள்ளது. கடையை நேரில் பார்வையிடலாம். தொடர்பு: 97, ஸ்டேசன் வீதி. யாழ்ப்பாணம். 7230

சகலவிதமான (S/Lon) எஸ் லோன் உப உறுப்புக்களைச் செய்யக்கூடிய தொழிலாளி வேண்டும். அவர் முன் அனுபவமுள்ளவராக இருத்தல் முக்கியம் சம்பள விபரத்துடன் 8-11-80க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 7233, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7233

அனுபவம் உள்ள அச்சுக் கோப்பாளர் (தமிழ், ஆங்கிலம்) தேவை. கைடல் வேலை இயந்திரத்தில் அனுபவமுள்ள இயந்திர இயக்குனர் தேவை. பஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7239

## கல்வி

மின்சார தொழிலில் 50 வருட அனுபவமும், பல வருடங்கள் மின்சார போதனாசிரியராக இருந்தவரிடமிருந்து ஆறு வாரங்களில் Electrican டிப்புளோமா - நான்கு வாரங்களில் Wireman டிப்புளோமா, 24 வருடங்களுக்கு முன் பதிவுபெற்ற Jaffna Technical School, 53, (30) டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 7238

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க துணி விற்பனை

(பலாலி)

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் புடவை ஏலவிற்பனையை எல்லாக் கிளை நிலையங்களிலும் நடாத்தி வருகிறது. தீபாவளி, நத்தார், புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு நடாத்திவரும் இவ் ஏலவிற்பனையில் பலகாலமாக விற்கப்படாதிருந்ததும், விற்க முடியாததுமான துணிகளே ஏலமாக இடம்பெற்றுள்ளன. தினம் ஒருகிளை நிலையமாக நடைபெற்று வரும் இவ் ஏலவிற்பனை, நுகர்ச்சியாளரிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். சகல கிளை நிலையங்களிலும்சங்கப் பொதுமுகாமையாளர் திரு. எஸ் நவரத்தினம் தலைமையில் இரவு 10 மணிவரைக்குமேலும் விற்பனை நீடித்து நடைபெறுகிறது. (அ)

## மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்.

## ஏலவிற்பனை

மேற்படி சங்கத்தில் உள்ள பழுதடைந்த நுகர்ச்சிப் பொருட்கள், கழிவுசீனி, சழிவுமா ஆகியன 07-11-1980 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொதுமுகாமையாளர்

7244

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல: 84அ - பிரிவுகள் 524, 532

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ் சென்ற கரவெட்டி வடக்கு, நல்லதம்பி நீக்கிலாப்பிள்ளை சுவாக்கீம்பிள்ளை மரணசாதன விடயத்தில்

(இறப்பு) சுவாக்கீம்பிள்ளை கைம்பெண் ஞானப்பு, கரவெட்டி வடக்கு,

1. (அ) இறங்கசாமி இராமசாமியும்,
1. (ஆ) பெண் ஞானசௌந்தரியும் இருவரும்

— மனுதாரர்கள்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 37/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்முற்றுகும்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரு 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு வேண்டப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 8-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
வே. கணபதிப்பிள்ளை,
பதிவாளர்

வரைவு:
(ஒப்பம்)
வ. செல்லையா,
மனுதாரர்களின் சட்டத்தரணி.
7241

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தாமரைப்பூ மார்க் சந்தனாதித் தைலம்

## விசேட அறிவித்தல்

முப்பது வருடமாக இலங்கை மக்களின் அபிமானம் பெற்ற தாமரைப்பூ மார்க் சந்தனாதித் தைலத்தின் தரத்தை, பாழடிப்பதற்காக சில வியாபாரிகள் எமது பெயரில் தாமரைப்பூ மார்க் சந்தனாதித்தைலமென விநியோகிக்கின்றனர். இதனால் எமது தயாரிப்பான தாமரைப்பூ மார்க் சந்தனாதித்தைலத்தை விநியோகம் செய்வதில் கஸ்டமாகவுள்ளது. நாட்டில் நடமாடும் போலி தாமரைப்பூ மார்க் சந்தனாதித் தைலம் பற்றி பூரண தகவல்களுடன் எமக்கு அறிவித்தால் அதற்காக பொதுமக்களுக்கு சன்மானம் வழங்க முன்வந்துள்ளோம். தகவல்கள் அனைத்தும் ரகசியமாகவே வைக்கப்படும்.

## ஹைதரலி அன் கோ,

142, நாரான்பிட்டி வீதி, பொரளை, கொழும்பு-8.

7246

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 1981-ம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

01-01-1981 தொடக்கம் 31-12-1981 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 19-11-1980-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை 1

| | விபரம் | | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | வண்டி வான் சாலைக்குத்தகை | — | ரூபா 100-00 | ரூபா 10-00 |
| 02. | இரட்டை மாட்டுவண்டி மூலம் இந்நகரசபை எல்லைக்குள் கூட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு | — | ரூபா 100-00 | ரூபா 10-00 |
| 03. | நகர சபைக்குச் சொந்தமான சந்தையிலுள்ள சாணியை அள்ளி எடுப்பதற்கு | — | ரூபா 100-00 | ரூபா 10-00 |

| | வியாபாரம் | கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | சென்ற வருடம் ஏற்றுக் கொள்ளப் பட்ட கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | மாட்டிறைச்சிக்கடை | எல்கியூ 1 | — | ரூ. 17,850/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 02. | மாட்டிறைச்சிக்கடை | எல்கியூ 2 | — | ரூ. 11,500/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 03. | மாட்டிறைச்சிக்கடை | எல்கியூ 3 | ரூ. 7500/- | — | ரூ. 500/- | ரூ. 25/- |
| 04. | மாட்டிறைச்சிக்கடை | எல்கியூ 4 | ரூ. 7000/- | — | ரூ. 5 0/- | ரூ. 25/- |
| 05. | ஆட்டிறைச்சிக் கடை | என் எம் எஸ் 1 | — | ரூ 2( ,( 00/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 06. | ஆட்டிறைச்சிக் கடை | என் எம் எஸ் 2 | — | ரூ. 21,000/- | ரூ. 500/- | ரூ. 25/- |
| 07. | ஆட்டிறைச்சிக் கடை | என் எம் எஸ் 3 | ரூ. 16,0 0/- | — | ரூ. 500/- | ரூ. 25/- |
| 08. | ஆட்டிறைச்சிக் கடை | என் எம் எஸ் 4 | ரூ. 15,000/- | — | ரூ. 500/- | ரூ. 25/- |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 18-11-1980-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித் தரமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும், கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப்பணமும் படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

முறைப்படி கேள்விப் படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுக்கடித மூலம் அனுப்பப்படலாம். எவற்றிற்கு கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபைத் தலைவருக்குண்டு.

சென்ற வருடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையிலும் பார்க்க குறைவான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

நான்கு மாட்டிறைச்சிக் கடைகளில் சித்திகர கேள்விக்காரர்கள் நால்வரும் ஒப்பந்தம் செய்த பின்பே இக்கடைகளில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர். ஒரு கடையில் சித்திகர ஒப்பந்தக்காரர் தானும் ஒப்பந்தம் செய்யத் தவறும் பட்சத்தில் நான்கு கடைகளினதும் கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டு, புதிய கேள்விகள் கோரப்படும். நான்கு கடைகளுக்குமான ஒப்பந்தங்கள் செய்துகொண்டபின் ஒரு கடையின் ஒப்பந்தம் தானும் இரத்துச்செய்யப்பட நேரிடின், மற்றைய சகல கடைகளினதும் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டு, நான்கு கடைகளுக்கும் மீண்டும் புதிதாக கேள்விகள் கோரப்படும்.

ஆட்டிறைச்சிக் கடைகளுக்கும் மேற்படி நிபந்தனை பொருந்தும்.

முன்னைய வருடங்களில் தவறுனராகச் சபையால் கருதப்பட்டவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
7226.

எஸ். கே. கிரவியநாயகம்,
தலைவர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரம்ஷரில் பயங்கரச் சண்டை: ஈராக்படைக்கு பலத்த சேதம்!

## ஈரானுக்குள் ஊடுருவலும் நிறுத்தப்பட்டதாக தெஹ்ரான் வானொலி அறிவிப்பு

லண்டன், நவ-2

ஈரானின் மிகப்பெரிய துறைமுகநகரமான கொரம்ஷருக்கு அருகே ஈரான்-ஈராக்து நுப்புக்களிடையே நடைபெற்ற பயங்கரச் சண்டையில் ஈராக் துருப்புக்கள் பல நூற்றுக்கணக்கானோர் மாண்டுவிட்டதாக தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.

ஈரானுக்குள் முன்னேறிவந்த ஈராக் படைகளின் முன்னேற்றம் நிறுத்தப்பட்டு விட்டதுடன் அவை பின்னேக்கி விரட்டப்பட்டதாகவும் அந்த வானொலி தெரிவித்தது.

ஈரானின் மற்றுமோர் எண்ணை நகரமான அபடானில் இப்போது கடும்சண்டை நடைபெற்று வருகிறது. ஈராக்கின் பல விமானங்களை அங்கும் ஈரான் சுட்டுவீழ்த்தியுள்ளது. (கு)

## அணிசேராஇயக்கப் பிரதிநிதிகள் சமாதான முயற்சிபற்றி பெல்கிரேட்டில் ஆராய்கின்றனர்

பெல்கிரேட், நவ.2

ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஆராயவுள்ள அணிசேரா இயக்கத்தின் பிரதிநிதிகள் இன்று பெல்கிரேட் வந்து சேர்ந்தனர்,

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் ஏற்கனவே வந்துசேர்ந்திருந்தார்: அல்ஜீரிய வெளியுறவு அமைச்சரும் இதில் கலந்து கொள்ள விருந்தாராயினும் கடைசி நேரத்தில் அவர் வந்துகொள்ளவில்லை என்று அறிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆஸ்லாவியா, கியூபா, ஸாம்பியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சரும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதியுமே இன்று கூடி ஆராய்கின்றனர்.

வளைகுடாப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதுடன் அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்கும் ஈரான்- ஈராக் நாடுகளுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தவே அணிசேரா இயக்கம் தற்போது முயன்றுள்ளது. (கு)

## ஈராக் விரும்பவில்லை

பாக்தாத், நவ.2

ஈரான்- ஈராக் சண்டையில் சோவியத்யூனியன் உட்பட வேறு எந்தநாடுமே தலையிடுவதை ஈராக் விரும்பவில்லை என்று ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துத்துள்ளார்

அமெரிக்காவின் அவசிய மற்ற தலையீடுகளையும் அவர் கண்டித்தார். (கு)

## "தென் ஆபிரிக்க அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்"

(யாழ்ப்பாணம்)

தென் ஆபிரிக்காவில் விசாரணை எதுவுமின்றி நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கோரும் பத்திரமொன்றை இலங்கையிலிருந்து அறவழிப் போராட்டக் குழுவினர் தென் ஆபிரிக்கப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அப்பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பேராசிரியர் திரு. கு. நேசையா உட்பட அறவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்த பலர் கையொப்பமிட்டுள்ளனர்.

விசாரணை எதுவுமின்றி சிறை வைக்கப்பட்டிருக்கும் மேற்படி கைதிகதி விடுதலை செய்யக்கோரி சர்வதேச தோழமை இயக்கம் சர்வதேச ரீதியில் ஒரு போராட்டத்தை நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது, (கு)

## கண்தான சங்கக் கிளை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் தமது பிரதேசத்தில் கண்தான சங்கத்தின் கிளை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## சிங்களமொழி தேர்ச்சியுற்ற மருந்துகலவையாளர் பிரச்னை

### சங்கக் கூட்டத்தில் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''யாழ் மாவட்டத்தில் சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சையில்சித்தியெய்திய பல ஆண்டுகள் சென்ற பின்பும் தமக்கு கிடைக்க வேண்டிய பதவி வர்ஜிதம், பதவி நிரந்தரம், வருடாந்த சம்பள உயர்வு என்பன கிடைக்காது பல மருந்து கலவையாளர்கள் சிரமப்படுகின்றனர். இக்குறைபாட்டை உடன் நீக்குவதற்கு சுகாதார சேவைப்பணிப்பாளர் நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறான முக்கிய தீர்மானமொன்று அரசாங்க மருந்து கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையின் 10 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சங்கத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ளஹோட்டல் பரடைஸ் மேல் மாடியில நடைபெற்ற இசகூட்டதில் யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மருந்து கலவையாளர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர முக்கிய தீர்மானங்கள் பின் வருமாறு நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட மத்திய மருந்துச்சாலைகளில் சாதாரண தொழிலாளர்களை நியமிக்கும் திட்டத்தை யாழ். மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

புதிய மருந்து கலவையாளர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ்- மாவட்டத்தில் ஒன்பது புதிய மருந்து கலவையாளர்களை நியமிக்க கொழும்பிலுள்ள சுகாதார பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கி பல மாதங்களாகியும் இதுவரை அவர்களை நியமிக்காமல் இருப்பது பற்றி சங்கம் தனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன், இவர்களை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றது.

மருந்து கலவையாளர்கள் லீவு எடுப்பதிலுள்ள கஷ்டங்களை நீக்குமுகமாக நிரந்தர றிலீவ் மருந்து கலவையாளர்களை நியமிக்க வேண்டும்.

புது வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக கே. நடராசாவும், செயலாளராக நா. மா. கந்தசாமியும், பொருளாளராக சி. திருநாவுக்கரசுவும், செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப்பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய பரிசளிப்புவிழா இம்மாதம் 8ம் திகதி பிற்பகல் அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், வைத்தியகலாநிதி ச. சபாரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (கு)

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜோதிட ஆய்வு மன்றத்தின் முதலாவது ஆய்வுக்கூட்டம், இம்மாதம் ஒன்பதாம் திகதி மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கைரேகை ஆய்வாளர் திரு. ரி. பாக்கியராஜாவின் ஆராய்ச்சிக் கட்டுரையான 'கைரேகையில் விவாக ரேகை உண்டா?' என்ற தலைப்பிலான கட்டுரையும், எண்ஜோதிடர் திரு. எல். செல்வநாதனின் 'எட்டாவது எண் தீமை செய்யுமா?' என்ற தலைப்பிலான கட்டுரையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆய்வரங்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக தமிழ்விரிவுரையாளரும், இலங்கைக் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத் தலைவருமான திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் நடைபெறும். (அ)

## மூவருக்குப் பாராட்டு

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி சுரவெட்டி உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. மு. தம்பிமுத்துவிற்கு பிரிவுபசாரமும் புதிய உதவிஅரசாங்க அதிபர் திரு ஆ குணநாயகத்துக்கும் அகில இலங்கை தேசிய நாடக விழாவில் பிரதமரின் முதல் பரிசைப் பெற்றவரான திரு. ச. கதிர்காமுவிற்கும் பாராட்டு விழா வொன்றினையும் ஒரே தினத்தில் வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்தினர் நடத்தினர். (கு)

## வீட்டினுள் அத்துமீறி நுழைந்து மண்வெட்டியால் தாக்கினர்

### சந்தேகநபர் விளக்கமறியலில்

(புலோலி)

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்தவரை மண்வெட்டியால் தாக்கிப் படுகாயம் விளைவித்த நபரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

வல்வெட்டியைச் சேர்ந்த இளையதம்பி அமிர்தலிங்கம் என்பவர் தனது வீட்டில் இருந்தபோது குமாரசாமி பிரேம்குமார் என்பவர் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து அமிர்தலிங்கத்தை மண்வெட்டியால் தாக்கிக் காயம் விளைவித்த சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலீஸ், இன்ஸ்பெக்டர் திரு. உடுகம்பல தலைமையில்சென்ற பொலிஸ் கோஷ்டி விசாரணையின் பின்னர் பிரேம்குமார் என்பவரைக் கைது செய்தது.

கைது செய்யப்பட்ட இந்நபர் பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (கு)

## லட்ச ரூபா பெறுமதியான யானைத்தந்தங்கள் மீட்பு!

(வவனியா)

வவனியா வற்றுப்பளை பகுதியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து லட்ச ரூபா பெறுமதியான இரண்டு யானைத் தந்தங்களை வவனியா பகுதி வனமிருக பாதுகாப்பு அதிகாரி திரு. முறியான்சே பொலிசாருடன் சென்று கைப்பற்றியுள்ளார்.

இது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் செல்லக்கண்ணு என்பவரை பொலிசார் கைது செய்துள்ளதுடன் இன்னுமொருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

இரகசியமாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து வவனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. ஆரியதிலக, என். ஐ. ஜயவிக்கிரம ஆகியோர் தலைமையில் விரைந்த பொலிஸ் கோஷ்டி தந்தங்களை மீட்டனர். அத்துடன் வற்றுப்பளை ஞானமூர்த்தி காட்டுப் பகுதியில் வெடிவைத்து கொல்லப்பட்டு எஞ்சியிருந்த யானையின் சிதைவுகளையும் பார்வையிட்டனர்.

இது தொடர்பாக வனமிருக பாதுகாப்பு அதிகாரி திரு. முறியான்சே கருத்து தெரிவிக்கையில், சுமார் இரண்டு மாதங்களுக்குமுன் இந்த ஆண் யானை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், இதில் இருந்தே கைப்பற்றப்பட்ட யானைத் தந்தங்கள் எடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் தாம் சந்தேகிப்பதாகத் தெரிவித்தார்.

சந்தேகநபரை பொலிசார் வவனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. பி. பெர்னாண்டோ நாளை மறுதினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கு)

## அதிகாரிப் பிரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கில் மாணை விசாரணை அதிகாரிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துமாறு நீதியமைச்சரை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டுள்ளார். (கு)

# அமெரிக்க பணயக்கைதிகள் இன்று விடுதலையாவார்கள்?

(நியூயோர்க்)

அமெரிக்க பணயக்கைதிகள் இன்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளை ஆராயுமுகமாக ஈரான் பாராளுமன்றம் இன்று மீண்டும் கூடியது.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே பணயக் கைதிகளை விடுதலை செய்வதன்மூலம் திரு ஜிம்மி காட்டரின் வெற்றிக்கு உதவ வேண்டும் என்று ஈரானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கருதுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பது பணயக் கைதிகள் விடுதலையை மேலும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

இதே வேளையில் ஈரானின் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்ட இஸ்லாமியக் குடியரசுக்கட்சியின் ஆதரவுப் பத்திரிகை ஒன்று நேற்று வெளியிட்ட செய்தியொன்றில் பணயக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான நிபந்தனைகள் பற்றி ஆராய்வதில் காலந்தாழ்த்தாது ஈரானியப் பாராளுமன்றம் உடனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும் அப்பத்திரிகை கேட்டுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுளைப் பற்றிய தத்துவ ரகசியங்களை அறிய நீ சித்தத்தை நிறைந்தவனாக இருப்பாயாகில் அவரே சற்குருவை உனக்கு அனுப்பி வைப்பார். குரு ஒருவரைக்காணத் தேடி அலைய வேண்டிய சிரமம் உனக்கு இராது.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### பட்ஜட்டும் எதிர்காலமும்

நாளை மறுதினம் புதன் கிழமை பட்ஜட் நாளாகும். வருடாவருடம் அது துண்டு விழும் தொகையைச் சமாளிக்கும் யோசனைகளாகவே இருந்து வருகின்றது.

அதேபோல் வருடா வருடம் பட்ஜட் நாளை அண்டி வர்த்தகர்கள்பொருட்களைப் பதுக்கிக் கொள்ளை லாபம் அடிக்கும் முயற்சியில் ஈடுபடுவதும் இயல்பு.

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் சட்டமாகவே இருந்து வருகிறது. பாவனையாளர்களின் ஒத்துழைப்பு என்பது முயற்கொம்பு.

இவ்வருடம் துண்டுவிழும் தொகை 1559 கோடி ரூபா வாகும். இதற்கு நிதி, திட்டமிடல் அமைச்சர் வழிகண்டே தீருவார்.

அது எவ்விதத்தில்செயற்படும், எங்கள் வருங்காலம் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதே மக்களின் விசனமாகும்.

அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் சிலவற்றின் விலையைக் குறைப்பதும், ரயில், பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதும் கரைபுரண்டோடும் வெள்ளத்தில் சிறு துளிகள் எனக் கொள்ளலாம்.

இன்று நாட்டில் நிலவி வரும் பணவீக்கமே மக்களின் முதல் எதிரி. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு நாட்டின் எல்லாப்பகுதியினரிடையேயும் பெருந் தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது; குறிப்பாக நடுத்தரவருமானத்தோரிடையே தாக்கொணுநிலை காணப்படுகிறது.

இதற்கடுத்த எதிரி வேலையில்லாமை. கடந்தஇரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரக் கொள்கை மாற்றங்களினால் சில துறைகள் விரிவடைந்தது உண்மை. உதாரணமாக வர்த்தகம், கட்டிடத் தொழில், சேவைகள் முதலானவை பலருக்கு வேலை வாய்ப்பளித் திருக்கின்றன. ஆனால் வேறு சில துறைகளில், விசேடமாக கிராமியக் கைத் தொழில்களிலும் மற்றும் சிறுகைத்தொழில்களிலும் வேலை வாய்ப்புக்கள் குறைந்துவிட்டன.

இதற்கு அரசின் விரிவான இறக்குமதிக் கொள்கையே காரணம். உபஉணவுப் பயிர்கள், சிறுகைத் தொழில்கள், சேமிப்புப் பழக்கம் போன்ற சாதாரண மனிதனுக்கு அத்தியாவசியமான துறைகளில் வளர்ச்சி குன்றி வருகின்றது.

கடந்த இரு ஆண்டுகளில் நாம் காணும் மாற்றங்கள் ஏழை மனிதனின் அபிவிருத்திக்கு உகந்ததாகத் தெரியவில்லை. வெளிநாட்டுப் பொருட்கள் - ஆடம்பரப் பொருட்கள் அநேகமாக உயர்ந்த வருமானப்பகுதியினரிடையே நுகர்வு ஆர்வத்தினைப் பெரிதும் வளர்த்துவிடுகிறது.

கிராமங்களிலுமே இவ்வித பொருட்கள் மக்களின் சேமிப்புப் பழக்கத்தைக் குறைத்து வருகின்றன. வெளிநாட்டு உழைப்பால் வரும் பெருந்தொகைபணம் உழைக்கக் கூடிய பலரை சோம்பித்திரிய வழி வகுக்கிறது. பல பகுதிகளிலிருந்தும் பணம் வரும் போது பலவித புதிய தாக்கங்கள் ஏற்படுவது இயற்கை. புதிய பணக்காரர் மத்தியில் பணப்பழக்கம் பல ஆடம்பர நடை, உடை பாவனைகளில் பிரதிபலிக்கின்றது.

கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கை உருவானதும் உற்பத்தி விவசாயம் பாதிக்கப்பட்டது இன்றைய அபாயநிலைமையைக் குறிக்கின்றது.

அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களாகிய சுதந்திர வர்த்தக வலயம், மகாவலி அபிவிருத்தி, வீடமைப்பு முதலிய துறைகளில் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பை எதிர்பார்க்கின்றனர். ஆட்சியாளர் அந்நியச் செலாவணி அதிகரிப்பு, விவசாய முன்னேற்றம், உணவுத் தன்னிறைவு, மின்சக்தி அதிகரிப்பு முதலிய நன்மைகளை எதிர்பார்க்கின்றனர்.

எல்லாம் எதிர்பார்ப்புக்களாய் இருக்கும் நிலையில் பணவீக்கநிலை பயங்கரமுறையில் ஏறிக்கொண்டே போகின்றது. எதிர்பார்த்த தொகையிலும் இரண்டு மடங்கு கூடுதலாகத் தேவைப்படலாம். எல்லாவற்றிற்கும் வெளிநாட்டு உதவி கோரி நிற்கும் அரசு, வெளிநாடுகளும் இன்றைய பணவீக்க நெருக்கடியிலிருந்து தப்பியிருக்கவில்லை என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

இந்தச் சிக்கலான கட்டத்தில் எமது வருங்காலம் பற்றி நாம் எதனையும் குறிப்பிடத்தக்க நிலையில் இல்லை.

வாழ்விலும் தாழ்விலும் தன்கையே தனக்குதவி என்றும் தனது சுயமுயற்சியால் தான் பிழைக்கும் திறமையே பெரிதென்றும், ஆனமுதலில் அதிகஞ்செலவழிக்காமல் மானமுடன் வாழப்பழகுவதே எமக்கு விடுதலைதேடும் வழியென்றும் வற்புறுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

# அகிலத்தின் கவனத்தை ஈர்க்கும் அமெரிக்க ஜனதிபதி தேர்தல்

சந்திரத் தீபத்தை ஏந்தி நிற்கும் ஐக்கிய அமெரிக்காவின் ஜனதிபதி தேர்தலின் முதற்கட்டமாகிய தெரிவாளர் குழுத் (Electoral College) தேர்தல் நாளை ஆரம்பமாகிறது. இந்நிலையில் மட்டுமே அமெரிக்க மக்கள் ஜனதிபதி தெரிவில் நேரடிபங்கு கொள்வதால் இதுவே ஜனதிபதி தேர்தலின் உயிர்நாடி என்று கூறலாம்.

1789ல் பில்டெல்பியாவில் செப்டம்பர் 17ம் நாள் எழுதப்பட்ட நெகிழாத்தன்மையுடைய உலகின் முதலாவது எழுதிய அரசியலமைப்பான ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின்படி ஜனதிபதி தேர்தல் மூன்று கட்டத்தில் நடைபெறுகிறது. முதலில் மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் இத்தனை பேர் என தெரிவாளர்கள் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. நியூயோர்க் 43 பேரையும் கலிபோர்னியா நாற்பது பேரையும் தெரிவாளர்கள் தொகையாகபெற்று அதிக தெரிவாளர்களை உடைய மாநிலங்களாகத் திகழ்கின்றன. அலஸ்கா, வேமிங் போன்ற பல சிறிய மாநிலங்கள் 3 பேரை மட்டும் தெரிவாளர் தொகையாக பெறுகின்றனர். மொத்தமாக 530 தெரிவாளர் தொகையை ஐக்கிய அமெரிக்கா பெற்றுள்ளது.

ஜனதிபதி, உபஜனதிபதிக்கு போட்டியிடுவோர் பெயர்கள் அறிவிக்கப்பட்டதும் கட்சிகளும் தனியாரும் தமது கொள்கை திட்டங்களை விளக்கி மக்கள் முன் பிரச்சாரம் செய்வர். பின்ன ஒவ்வொரு மாநிலத்திலும் தெரிவாளர் குழுத்தேர்தல் முதலில் நடைபெறும். ஜனதிபதி வேட்பாளர்களின் பெயர்கள் பல மாநிலத்து வாக்குச்சீட்டுக்களில் பொறிக்கப்படும். சில மாநிலங்கள் ஜனதிபதி வேட்பாளரின் கட்சி தெரிவாளரின் பெயரை மட்டும் வாக்குச்சீட்டில் பொறிப்பதும் உண்டு. மக்கள் தமது வாக்குகளை விருப்பப்பிரகாரம் அளித்த பின் வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்கு எண்ணிக்கைபெறும் தெரிவாளர் குழு தெரிவுசெய்யப்படும். அத்தவேளை ஒவ்வொரு தெரிவாளர் குழுவுக்கும் மக்கள் அளித்த வாக்குகளும் எண்ணப்பட்டு அது பிரசித்தி வாக்குகள் (Popular Vote) எனக் குறிக்கப்படும்.

இரண்டாம் சட்டமாக இத்தெரிவாளர் குழுவினர் மார்கழி மாதம் 15ம் திகதி ஒன்று கூடி தமது நேரடி வாக்களிப்பு மூலம் ஜனதிபதி உபஜனதிபதியைதெரிவுசெய்வர். ஆனால் இவர்களது வாக்குகள் உடன் எண்ணப்படமாட்டாது. மூன்றாவது சட்டமாக 1981 தை 6ம் திகதி கூட்டப்படும் அமெரிக்க காங்கிரஸ் (செனட் + பிரதிநிதிகள் மன்றம்) இல் வைத்தே இத்தெரிவாளர்குழு வாக்குகள் எண்ணப்படும். வெற்றி பெறுபவர் ஜனதிபதியாகத் தெரிவுபெறுவர். தற்செயலாக போதிய வாக்குகளை வேட்பாளர்கள் பெறாதவிடத்து முதலாவதாக வரும் மூன்று போட்டியாளர்களிடை இருந்து ஒருவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பது மூலம் ஜனதிபதியாகதெரிவுசெய்வர். இவ்வாறு தெரிவுபெறும் ஜனதிபதி 1981 தை 20ம் திகதி நண்பகல் பன்னிரெண்டுமணிக்கு அமெரிக்காவின் தலைமை நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பார்.

எனவே அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரும் தமக்கு ஆதரவு தரும் தெரிவாளர் குழுவை மக்கள் தெரிவுசெய்ய வைக்க வேண்டிய பாரிய பொறுப்பை ஏற்கின்றனர். எனவே அமெரிக்க ஜனதிபதி தேர்தல் வேட்பாளர்கள் தமது செயற்திட்டங்களை மக்கள்முன் வைப்பதும் விபரிப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகஉள்ளது.

— பற்றிமாகரன் —

அமெரிக்க அரசியலில் இரு கட்சி செல்வாக்கே அதன் அரசியலமைப்பு ஆரம்பமானது முதல் காணப்படுகிறது. 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மத்திய அரசாங்கத்துக்கு அதிக அதிகாரம் தேவை என்போர் திரு. ஹமில்டன் தலைமையிலும் மாநில அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்போர்திரு. ஜெபர்சன்தலைமையிலும் அணிதிரண்டனர். இவ் அணிதிரள்களே அமெரிக்காவின் கட்சிகளுக்கு கால் கோளிட்டன. திரு, ஹமில்டன் அணியினர்குடியரசுக்கட்சியாகவும்திரு. ஜெபர்சன் தலைமையிலான அணியினர் ஜனநாயகக்கட்சியினராகவும் (Democratic Party) நாளடைவில் கட்சி அமைத்துக்கொண்டனர். ஆரம்பகாலம் முதலே அமெரிக்காவின் ஆட்சி இரு கட்சிகளிடமும் மாறிமாறிச் சென்றுள்ளது. 1800 முதல் 1824 வரை குடியரசுக்கட்சியும் 1828 முதல் 1840 வரை ஜனநாயகக்கட்சியும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றன. ஆனால் 1862ல் ஆபிரகாம் லிங்கன் அடிமை விடுதலைக்காக அரும்பணியாற்றியதைத் தொடர்ந்து அவரின் குடியரசுக்கட்சி தனிச்செல்வாக்குப் பெற்றது. அமெரிக்காவில் அடிக்கடி தேர்தல்கள் நடைபெறுவதால் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாக உள்ளனர். ஜனதிபதி தேர்தல் நான்கு ஆண்டுக்கு ஒருமுறையும் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் இரண்டாட்டிற்கு ஒரு முறையும் மூன்றில் ஒருபகுதி செனட் பிரதிநிதிகளுக்கான தேர்தல்கள் இரண்டாண்டிற்கு ஒரு முறையும் மாநிலசட்டமன்றத் தேர்தல்கள்சில ஆண்டுக்கு மூன்றுமுறையும்கூட நிகழ்கிறது.

இதைத்தவிர பல மாநிலங்கள் நீதிபதிகளையும் அரச உயர் அலுவலர்களையும்கூட தேர்தல் மூலம் தெரிவு செய்கின்றன. எனவே அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும்இடையே அமெரிக்காவில் நெருங்கியதொடர்பு உண்டு.

இம்முறை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக இன்றைய அமெரிக்க ஜனதிபதி ஜிம்மிகார்ட்டர் மீண்டும் போட்டியிடுகின்றார். அதேவேளை குடியரசுச்கட்சி வேட்பாளராக அமெரிக்காவின் எம் ஜி ஆர் எனவர்ணிக்கப்படும் ஹலிவூட் புகழ்ச்செல்வந்தர் றொனல்ட் றீகன் போட்டியிடுகின்றார். ரஷ்யா — அமெரிக்க உறவை வலுப்படுத்தியமைக்காக கார்ட்டர் தன்னைச்சமாதானக் காவலனாக மக்கள்முன்கூற றீகன் கார்ட்டரை அமெரிக்காவை ரஷ்யாவிடம் சரணாகதி அடையவைத்த கோழையென மக்கள் முன் வர்ணிக்கிறார். இவ்வாறு ஈரான் பணயக்கைதிகள் விவகாரம் முதல் அமெரிக்காவின் இன்றைய பணவீக்கப் பிரச்னைகள்வரை பலதரப்பட்ட அரசியல் நிகழ்வுகளையும் ஜனதிபதி தேர்தல் பிரச்சாரக் களத்தில் கட்சிகள் மக்கள் முன் விமர்சனம்செய்து விளக்கிக் கொண்டிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க, சுயேட்சை வேட்பாளரான அண்டர்சனும் தனது நிலைப்பாட்டை மக்கள்முன் தெளிவுபடுத்தி வாக்குக்கேட்கிறார். ஆயினும் கார்ட்டர் — றீகன் மோதலே வெற்றியைத் தீர்மானிக்கும் வலிமையுடையதாக உள்ளது.

அமெரிக்க ஜனதிபதி சர்வ வல்லமை படைத்த செயற்திறம் உடையவராக இருப்பதால் இருமுறைக்குமேல் ஜனதிபதி பதவிக்குப் போட்டியிடாமல் விடுவது ஒருமரபாக அமைந்திருந்தது. ஆனால் பிராங்லின் டிரூஸ்வெல்ட் (Franklin Droosevelt) நான்கு முறை ஜனதிபதி பதவிக்குப் போட்டியிட்டுத் தெரிவாகி இம்மரபை உடைத்தெறிந்தார். ஆயினும் இருமுறைக்கு மேல் போட்டியிட முடியாது எனும் மரபு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பின் 22-வது அரசியலமைப்புத் திருத்தப்படி சட்டமாக பின்னர் மாற்றப்பட்டுவிட்டதால் தற்போது ஒருவர் இருமுறைக்குமேல் ஜனதிபதி பதவிக்குப்போட்டியிடமுடியாது. இவ்வகையில் கார்ட்டருக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம். இதனால் மக்கள் பெரும்பாலும் கார்ட்டருக்கு மேலும் கால நீடிப்பு செய்து அவரின் செயற்திறனை முற்றாகப் பரிசிலிக்கலாம் என்பது பலரின் நம்பிக்கையாகஉள்ளது.

செயல்துறைத் தலைவர் (ஜனதிபதி) வலிமையற்றிருந்தால் அரசாங்கமும் வலிமையற்றதாகும். வலிமையற்ற அரசாங்கம் என்பது தீய அரசாங்கத்தின் மறுபெயராகும் என்பது பிரபல அமெரிக்க அரசியல் அறிஞர் அலெக்சாண்டர் ஹமில்டனின் கூற்று. எனவே அமெரிக்க அரசியலமைப்பு தனது ஜனதிபதிக்கு சர்வவல்லமையுள்ள செயற்படு வல்லமையை அளித்துள்ளது. ஆயினும் வலுவேறுக்கம் (Seberation of Poivers) அமெரிக்க அரசியல் அமைப்பின் முக்கிய அம்சம். ஜனதிபதி சட்டமன்றம் (காங்கிரஸ்) நீதித்துறை என்பன மூன்றிலும் வேறான மூன்று பகுதிகளாக இயங்கவேண்டும் என்பது அமெரிக்க அரசியலமைப்பின் அபிலாசை. இதன் பிரதிபலிப்பாகவே வெள்ளை மாளிகையான ஜனதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் தலைநகரில் அமைக்கப்படாது

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### இலங்கை யாத்திரிகர் கஷ்டம்தீர...

இந்திய ஸ்தலங்களுக்கு செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் தலைமன்னார் பியரில் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதுடன், சில தடவைகளில் யாத்திரையும் தடைப்பட்டு விடுகிறது. யாத்திரிகர்களின் வசதிக்காக உடனடியாக கொழும்பு தூத்துக்குடிக் கப்பல்சேவையை ஆரம்பிப்பதுதான் இப்பிரச்னைக்கு தீர்வுகாணும் சிறந்த வழியாகும்.


கடந்தமாதம் 27ம் திகதி தலைமன்னார் பியருக்கு சென்ற இலங்கை யாத்திரிகர்கள் கப்பலில் ஏற அனுமதிக்கப்படவில்லை. இந்தியாவிலிருந்து இங்கு வந்தவர்கள் மட்டுமே கப்பலில் ஏற அனுமதிக்கப் பட்டனர். கப்பல் காப்டன் இலங்கையாத்திரிகர்களை ஏற்ற முற்றாக மறுத்துவிட்டார்.

இலங்கை யாத்திரிகர்களில் பெரும் பாலாேருக்கு 30-9-80 வரை கப்பல் டிக்கட் வழங்கப்பட்டிருந்தது அப்படியிருந்தும் 27-9-80ல் தடைவிதிக்கப்பட்டது. இதனால் பல யாத்திரிகர்கள் தலைமன்னாரில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களின் சாமான்கள் திருட்டுப்போயின. சிலர் இந்தியாவுக்கு கொண்டுசெல்ல கொண்டுவந்த பொருட்களை விற்கும் நிலை ஏற்பட்டது. இம்மாதம் 10ம் திகதிவரை இந்த அவலநிலை ஏற்பட்டது கடைசியில் வவுனியாபொலிஸ் அதிபர் தலையிட்டு சுங்கப் பகுதியினர் கப்பல் காப்டனுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 10-10-80 முதல் இலங்கை யாத்திரிகர்களில் அரைவாசிப்பேரைக் கொண்டு செல்ல ஏற்பாடாகியது. இன்ஸ்பெக்டர் சேனாதிராசா பொறுப்பாக இருந்துஇலங்கை யாத்திரிகர்களுக்கு ஏற்ற வசதிகளை செய்து கொடுத்தார்.

இக் கஷ்டங்களை நீக்க உடனடியாக கொழும்பு தூத்துக்குடி கப்பல்சேவையை இலங்கை யாத்திரிகர்களுக்காக ஆரம்பிக்கவேண்டும்.

[illegible]
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கார்மலே கபநலசேவை நிலையத்தில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவில் மெக்வைற் அச்சகத்தினரால் வெளியிடப்பெற்ற 'மரம் நாட்டும்பணி மகத்தான சேவை' என்ற நூலின் முதற் பிரதியை எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் வாங்குவதைப் படத்தில் காண்க.

# "குடிநீர் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவில்லை

## ஹோட்டலுக்குமட்டுமே பரிசீலிக்கப்பட்டது"

### யாழ். மாநகரமேயர் தகவல்

(யாழ்ப்பாணம்)

குடிநீர் கோரி விண்ணப்பித்த 200 க்கு மேற்பட்டோரின விண்ணப்பங்கள் நிதிக்குழுவில் பரிசீலனைக்கு வரவில்லை. ஹோட்டல் அசோகாவின் விண்ணப்பம் மட்டும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. மற்றும் விண்ணப்பங்கள் பின்னர் பரிசீலனைக்கு எடுக்கப்படும்."

யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

நிதிக்குழுக் கூட்டத்தில் அசோகா ஹோட்டலுக்கு நாளொன்றுக்கு 1500 கலன் தண்ணீர் வழங்குவதை அவதானித்து சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் பின்னர் சகல குழுக் கூட்டத்தில் நீர் வழங்குவதில்லையென தீர்மானிக்கப்பட்டு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உதவி முதல்வர் திரு. பி. எவ். சேவியர் கூறியதாவது: பாடசாலைகள் பொது ஸ்தாபனங்களும் தண்ணீருக்கு விண்ணப்பித்துள்ளன இவற்றுக்கும் நீர் வழங்குவது பற்றி ஆலோசிக்க வேண்டும். இவை தவிர 200 பேர் குடிநீருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

முதல்வர்: இவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு வரவில்லை.

திரு. எஸ். சண்முகராசா: பொதுமக்கள் நீர்வரி 15 வீதம் கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு நீர் வழங்கப்படவில்லை. நீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். முதலில் அவர்களுக்கு நீர் வழங்க வேண்டும். அல்லது இந்த வரியை நீக்க வேண்டும். பழையவர்களுக்கு நீர் கொடுத்த பின்னரே புதியவர்களுக்கு கொடுப்பது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

உதவி முதல்வர்; ஏற்கனவே தண்ணீர் கொடுக்கப்பட்டவர்களின் நிலை என்ன?

முதல்வர்: அவர்கள் நிலைமை பரிசீலனை செய்யப்பட்டு தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். சண்முகராசா: அவர்களுக்கு இன்னும் தண்ணீர் கொடுபடவில்லை.

முதல்வர்: பௌசர் மூலம் தான் தண்ணீர் வழங்குவது என தீர்மானித்துள்ளோம்.

திரு. ம. அலாசியஸ்: மக்களுக்குத் தான் முதலில் தண்ணீர் வழங்க வேண்டும். தனிப்பட்டவர்களுக்கும், ஹோட்டல் முதலாளிகளுக்கும், முதலில் வழங்கக்கூடாது. அவர்களை எங்களை இங்கு அனுப்பவில்லை. வரி கொடுத்து வாக்குப் போட்ட பொது மக்களைப் புறக்கணித்து, ஹோட்டல் முதலாளியை கவனிக்கலாமா?

திரு. யோ அ. செல்வநாயகம்; தண்ணீர்ப் பிரச்சினை முக்கியமானது. நகரில் சூழாக் கிணறுகள் தோண்டினால் எல்லாருக்கும் தண்ணீர் கொடுக்கலாம். இதனை சபை ஏற்றால் ஹோட்டலுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் தண்ணீர் கொடுப்பதில் பிரச்சினையில்லை.

திரு. இ. முத்தையா: மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாம் நேர்மையாக நடக்க வேண்டும். பல இடங்களில், வீதிக் குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. நாயன்மார்கட்டு பகுதியில் மக்கள் தண்ணீருக்குப் பெரும் கஷ்டப்படுகிறார்கள். வாயிறுப் பாளரைக் கைவிடக்கூடாது.

திரு: ஏ, துரைராஜசிங்கம்: நல்லூரிலிருந்து தான் நமக்கு தண்ணீர் வருகிறது. உப்பு நீராக நல்ல நீர் மாறிவிடும் என நீர்ப்பாசன இலாகா அறிவித்துள்ளது. ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் விவசாயத்திற்குரிய நீர் உப்பாக மாறிவிடும் என அஞ்சுகின்றார்கள். பல்கலைக்கழக ஆய்வுக் குழுவும் தண்ணீர் பற்றி அச்சம் தெரிவித்துள்ளது. கிணறுகளுக்கு சமீபத்தில் மலசலகூட குழி கட்டப்படுவதால், கிணற்று நீர் அசுத்தப்பட்டு அதனால் நோய் ஏற்படும் அபாயம் இருக்கிறது. நீர்வளச் சபை தண்ணீர் கொடுக்கக்கூடாது எனக் கூறியுள்ளது. ஆதலால் புதிதாக நீர் கொடுக்கக் கூடாது. இங்கு ஆட்சி செலுத்தும் சபை நீதியாக நடக்க வேண்டும். (க-கு)

## மறுமைப் பிரவேசம்

செல்வி மங்களம் அருள்நந்தியின் அகால மரணம் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்து ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தியது. செல்வி மங்களம் அருள்நந்தியை வடமராட்சியில் மட்டுமல்ல யாழ்ப்பாணம் முழுவதிலுமே நன்கு மக்கள் அறிவர். அவரது அளப்பரிய குணநிசயங்களினால் அநேகர் கவரப்பட்டனர். பெண் சாணார் இப்பக்கத்தில் செல்வி மங்களம் அரிய சாதனைகள் புரிந்துள்ளார்!

இவர் அறிவாளிகளின் வழித்தோன்றல். இவரது தந்தை அமரர் அருள்நந்தி முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வித்தியாதிபதியாகத் திகழ்ந்தார். பட்டங்கள் பல பெற்ற செல்வி மங்களத்தின் அகால மரணத்தினால் பருத்தித்துறை மக்கள் தலை சிறந்த ஓர் அறிவாளியை இழந்து தவிக்கின்றனர்.

இறக்கும்போது செல்வி மங்களத்திற்கு வயது 44. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்று விளங்கிய மங்களம் ஒரு சிறந்த ஆங்கில எழுத்தாளராகவும், ஆங்கில நாடகாசிரியாராகவும் பேச்சாளராகவும் விளங்கினார். இந்துவாகப் பிறந்து இந்துவாக மரித்தபோதிலும் கிறிஸ்தவர்களுடன் அளவளாவிப் பழகி வந்தார். சாதி, மத பேதமற்ற ஒரு பெருந்தகை இவர் ஒரு கல்லூரி அதிபருக்கேற்ற சகல இலட்சணங்களும் பொருந்தியிருந்தார். இன்னும் ஒரு ஆண்டு வாழ்ந்திருப்பின் நிச்சயமாக ஏதோ ஒரு பெரிய கல்லூரி இவர் சேவையைப் பெற்றிருக்கும்.

அறிவுத்தாகம் இவரிடம் மிகமிஞ்சிக் காணப்பட்டது ஏனோ இறைவன் அறிவாளிகளை இளமையில் தம்மிடம் அழைக்க முற்பட்டார். பருத்தித்துறை மயானத்தில் செல்வி மங்களம் அருள்நந்தியின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமித்தபோது எத்தனையோ தலந்துகள் வீணாக எரிந்து சாம்பராகின்றனவே என்று ஏங்கிக் கண்ணீர் மல்கி நின்றோரின் சோகக் காட்சி நெஞ்சை நெக்கு உருக்குவதாயிற்று.

ஜெயதேவி குணரத்தினம்
ஏழாலை தெற்கு.

# "விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்தமுடியாது"

## பாராட்டுவிழாவில் பண்டிதர் உறுதி

(புங்குடுதீவு)

"தமிழ்த்தேசிய இனத்தினுடைய விடுதலைப் போராட்டத்தை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. தாம் இழந்த ஆட்சியுரிமையை மீண்டும் நிலைநிறுத்தத் துடிக்கும் தமிழினம் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். ஒற்றுமையின்றேல் அனைவரும் தாழ்வுறுவோம் என்பதை உணர்ந்து தியாகத் தீயில் புடம் போட்ட தலைவர்களின் தலைமையில் வீறுநடை போடவேண்டியது இளைஞர்கள் கடமையாகும்".

இவ்வாறு ஊரைதீவு உபதபால் நிலையத்துக்கு தொலைபேசி வசதியளித்தமைக்காகவும் ஏனைய சேவைகளுக்காகவும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நேர்மையான பாதையில் இட்டுச்சென்ற தலைவர்கள் என்றும் தமிழினத்தை விடமாட்டார்கள். இலட்சிய பயணத்திலிருந்து என்றும் பின்னிற்கமாட்டார்கள். தங்களுடைய நலனுக்காக ஒரு சிலர் தியாகம்செய்த தொண்டர்களையும், தலைவர்களையும் தூற்றலாம். அபாண்டப் பழிகளை நேர்மையாளர்கள் மீது சுமத்தலாம். ஆனால் அறிவுள்ள தமிழினம் பொய்மையைப் புரட்டையும் ஒருபோதும் ஏற்காது என்பது. திணணம். அபிவிருத்திக்கு நாம் செலவிடும் பணம் எமது மக்களின் வரிப்பணத்தில் இருந்து தான் செலவிடப்படுகிறதே தவிர யாருடைய சொந்தப்பணத்திலுமிருந்தல்ல" என்றார்.

புங்குடுதீவு இளந்தமிழர் மன்றச் செயலாளர் சட்டத்தரணி திரு எஸ் கே. மகேந்திரன் தலைமை வகித்துப் பேசுகையில்

"ஒரு சிறிய மாவட்ட அபிவிருத்திச் சபையின் ... சுழுவிடுதலை ... என்பதில் அர்த்தமில்லை. சுதந்திரத்துக்குரிய தகுதியை நமது இனத்தின் மத்தியில் வளர்த்துக்கொண்டே சுதந்திரத்துக்காகப் போராட வேண்டும். தொகுதிகளையும் அபிவிருத்தி செய்துகொண்டு இனவிடுதலைப் போராட்டத்தையும் தொய்வின்றி நடத்தவேண்டிய பாரியகடமை பாராளுமன்ற உறுப்பினர்களைச் சார்ந்திருக்கிறது. ஒரு புறத்தில் ஆக்கப் பணிகள் நடைபெற மறுபுறத்தில் ஈழம் அமைக்கும் போராட்டம் விறுவிறுப்போடு நடைபெறவேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் இ. க. கணபதிப்பிள்ளை எஸ். எம். தனபாலன் நா. பஞ்சலிங்கம் செ. இலகுப்பிள்ளை, கே. என் தர்மபாலன், கு. சண்முகலிங்கம், திருமதி அநம்பொருள், வே. சுப்பிரமணியம் உபதபாலதிபர் டாக்டர், சி. கணேசு ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். திரு. கா. தத்தசாமி நன்றி கூறினார். (கு)

## அகிலத்தின் கவனத்தை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வாஷிங்டனுக்கு தலைநகருக்கு அப்பால் அமைக்கப்பட்ட தென்பர். இவ்வாறாக வலு வேறாக்கம் உடைய அரசியலமைப்பாக அமெரிக்க அரசியலமைப்பு அமைந்துள்ளபோதிலும் செயல்முறையில் ஜனாதிபதியின் வலிமை மிகுந்தே காணப்படுகிறது. போர்ப் பிரகடனம் முதல் சட்டமாக்கல் வரை காங்கிரஸ்ன் கையிலேயே இருப்பினும் காங்கிரஸில் உரையாற்றுவதன் மூலம் தனது நிலையை உறுதிப்படுத்த ஜனாதிபதிக்கு வலிமை உண்டு. அத்தோடு வீட்டோ அதிகாரம் எனப்படும் மறுப்பாணையை பிரயோகித்து காங்கிரஸின் சட்டவாக்கம் நிராகரிக்கவும் ஜனாதிபதிக்கு வலிமை உண்டு. அதேபோல் காங்கிரசும் ஜனாதிபதியை கட்டுப்படுத்த உரிமை பெற்றுள்ளது. ஜனாதிபதி உட்ரோ வில்சன் ஜனநாயக கட்சியினராகவும் அமெரிக்க செனட் சபை குடியரசுக் கட்சியினதுமாக இருந்த நேரத்தில் அமெரிக்காவை சர்வதேச சங்கத்தில் (League of Nation) சேர்த்த ஜனாதிபதியின்முடிவை செனட் நிராகரித்தது. இவ்வாறாக சமநிலைத்தடைகளுக்கு (check and balance) அமெரிக்க அரசியலமைப்பில் இடம் இருப்பதாலேயே அங்கு சுதந்திரதீபம் ஓங்கி எரிகிறது. ஆனால் அதேவேளை அரசியலமைப்புக்கு விளக்கம் அளிப்பதன் மூலம் ஆபிரகாம்லிங்கன் முதல் பல ஜனாதிபகள் தங்கள் அதிகாரத்தை அதிகப்படுத்தியுள்ளனர். அரசியல் அமைப்பு விளக்கம் மூலமே அமெரிக்காவின் செயல்முறைச் சிக்கல்கள் தீர்க்கப்படுகின்றன. ஏனெனில் அமெரிக்க அரசியலமைப்பு நெகிழாத் தன்மையுள்ளதால் 187 ஆண்டுகளில் 25 முறை மட்டுமே திருத்தப்பட்டுள்ளது. இதனால் செயற்தன்மை பாதிக்கப்படாதிருக்க அரசியலமைப்பு விளக்கங்களே முக்கியம் பெறுகின்றன. அமெரிக்க அரசியல் அமைப்பின் சமநிலைச் சில்லு (balance of Wheel) என வர்ணிக்கப்படும் நீதிமன்றத்தின் விளக்கங்கள் ஜனாதிபதியின் வலிமையை அதிகரிக்க வைத்த வரலாறு. அதிலும் அமெரிக்க தலைமை நீதியரசர் திரு. மார்ஷலால் வழங்கப்பட்ட உள்ளடங்குக் கோட்பாடு (Doctrine of Implied Powers) ஜனாதிபதியின் செயற்திறனை அதிகரிக்கச் செய்தது. இவ்வாறாக அமெரிக்காவின் சுதந்திரதீபத்தை ஏற்கும் பொறுப்பும் அவ் ஒளியால் உலகை ஒளியூட்டும் அல்லது எரித்து அழிக்கும் சக்தியும் படைத்த ஜனாதிபதி பதவி என்பது உலகின் சக்தி மிகு நிலைகளில் ஒன்று என்பது வெள்ளிடைமலை இப்பதவியில் நீண்டகாலம் இருந்தவர் எனும் பெருமைய அதாவது 1933 முதல் 1945 வரை பதவியில் தொடர்ச்சியாக இருந்தபெருமையை பிராங்ளின் ட்ருஸ்வோல்ட் தட்டிச் செல்கிறார். அதேவேளை மிகக் குறுகியகாலம் பதவியிலிருந்தவர் எனும் பெருமையை வில்லியம் ஹென்றி ஹரிசன் (William Henry Harrison) 1841 பங்குனி 4ம் திகதி முதல் சித்திரை 4 வரை பதவிவகித்து இறந்ததின் மூலம் பெறுகிறார். மேலும் முழுத்தெரிவாளர்குழுவினதும் ஏகமனத ஆதரவை பெற்ற ஒரே ஜனாதிபதியாக அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி வாஷிங்டனே திகழ் தார் 1820ல் மோனரோ (Monroe) எனும் ஜனாதிபதிக்கு ஒரு தெரிவாளர் எதிராக வாக்களித்துள்ளார். இதைதவிரபோட்டி நடைபெற்றே உள்ளது. ஜோர்ஜ் வாஷிங்டனை தவிர அனைத்து ஜனாதிபதிகளினதும் வாசஸ்தலமாக வெள்ளை மாளிகையே திகழ்ந்துள்ளது. வெள்ளைமாளிகையின் முதலாவது குடியிருப்பாளராக ஜனாதிபதி ஜோன் அடம்ஸ் திகழ்ந்தார். ஆபிரகாம்லிங்கனையும் ஜோன் எப் கென்னடியையும் உள்ளடக்கி எட்டு ஜனாதிபதிகள் தமது பதவியில் இருக்கையிலேயே மரணமடைந்துள்ளனர். இவ்வாறாக உலகின் முக்கிய பதவிகளில் ஒன்றான அமெரிக்காவின் 40வது ஜனாதிபதி கார்ட்டரா? ரீகனா? நாளை நடைபெறும் வாக்களிப்பு ஊகிக்கும் தன்மையை நிறுவிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வியுடன்பூரணவளர்ச்சியையும் கல்லூரிகள் கருத்திற்கொள்ளவேண்டும்"

## இரவுவிருந்தில் சென். ஜோன்ஸ் அதிபர்

(அரியாலை)

"பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தாலும், கல்லூரிகள் மாணவர்களின் பரிபூரண வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். எமது கல்லூரியின் அதிபர்களும், ஆசிரியர்களும் பரம்பரை பரம்பரையாக இந் நோக்கத்துடனேயே பணி புரிந்து வந்துள்ளனர். இருளில் ஒளிவிடும் தீப என்ற தனது இலட்சியத்திற்கு விசுவாசமாக அமைந்து அறியாமை, வறுமை, சமத்துவமின்மை ஆகியவைகளை அகற்றும் தீபமாக யாழ். பரி.யோவான் கல்லூரி பணிபுரிந்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் அதன் பணி தொடரும்."

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. ஸி. ஈ. ஆனந்தராசா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த இரவு விருந்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் நீதிபதி ஜே. டி. ஆசீர்வாதம் தலைமையில் நடைபெற்ற இவ்விருந்தில் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராசா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"பேராசிரியர் கைலாசபதி அவர்கள் எமது கல்லூரிக்கு வழங்கிய ஆசி மொழிகளுக்கு நன்றி கூறுவதோடு இக்கல்லூரி பழைய மாணவன் என்ற முறையிலும், இக்கல்லூரியினால் வளர்க்கப்பட்டவன் என்ற முறையிலும் பெருமையடைகிறேன்.

"அண்மையில் வெளியிடப்பட்ட "யாழ்ப்பாணம் 1980" என்ற நூலில் கலாநிதி ஹோம்ஸ் யாழ்ப்பாணத்தவரின் தனித்துவத் தன்மைகளைக் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தவர் சிக்கனமானவர், பழமை பேணுவோர். மதப் பற்றுடையோர். பிடிவாதக் குணமுடையோர். விருந்தோம்புவோர். முயற்சியுடையோர். பிரயோசனத்தையே மேலாகக்கொள்வோர், நிதான புத்தியுடையோர். பொதுவாகக் கற்றோர். நல்லதில் நம்பிக்கையற்றோர். குற்றங் காணும் குணமுடையோர். சந்தேகக் கண்கொண்டு நோக்குவோர். போட்டி மனப்பான்மையுடையோர். உணர்ச்சிவசப்படுவோர். தனித்தனி பிரியுந்தன்மையுடையோர். மக்களைக் கணிப்பதில் நிபுணத்துவமுடையோர். பேச்சினை இரசிப்போர். சாதியில் நம்பிக்கையுடையோர். மூட நம்பிக்கையுடையோர். ...டும் நலன் பேணுவோர். அடிமைத்தனத்தைச் சகிப்போர். குடியிறவுரிமைகளைப் பேணுதோர். இராணுவ பலத்தில் நம்பிக்கையுடையோர். உலோகாயதத்தில் நம்பிக்கையுடையோர்." என்று கூறியுள்ளார். கலாநிதி ஹோம்ஸின் கூற்றுக்களில் சில பொருத்துவனவாகவும், சில முரண்பாடானதாக இருந்த போதிலும், யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதி மக்களின் குணதிசயங்களை இது நன்கு விளக்குகின்றது. ஆயினும் ஒரு தனி நபர் இவையெல்லாவற்றையும் கொண்டவரல்லர். மேலே கூறிய தனித்துவக் குணங்களுள் யாழ்ப்பாணத்தவரின் குற்றங்காணும் தன்மையை வற்புறுத்துவதோடு கலாநிதி ஹோம்ஸ் சிக்கனத்தை ஸ்கொத்லாந்து மக்களோடு ஒப்பிடுகின்றார். இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் நாம் உயிரோடு வாழ்வதற்கும், இன்று நாம் பெற்றுள்ள உயர் பதவிகளுக்குமாக எங்களை நாமே பாராட்டிக்கொள்ள வேண்டும். எமது சமுதாயத்தில் பரி. யோவான் கல்லூரி நிலைத்து நிற்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

"1960-ம் ஆண்டு எமது கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் நிர்வாகமும், எமது கல்லூரியை உதவி பெறாத தனியார் பாடசாலையாக நடத்தத் தீர்மானித்த பொழுது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில ...ற்றங் காணும் குணமுடையோரும், சிக்கனப் பிரியர்களும், இம்முயற்சி நெடு நாளைக்கு நீடிக்காதென ஆருடம் கூறினார். எமது பழைய மாணவரினதும், விசுவாசம் உள்ள பெற்றோரினதும் ஆதரவினால் கடந்த இருபது ஆண்டுகளாக நாம் தனியார் பாடசாலையாக இதனை நடாத்தியுள்ளோம். எமது கல்லூரி போன்ற தனியார் பாடசாலைகளின் சேவைகளை மதித்து அவற்றிற்கு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ள அரசாங்கத்துக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்

"யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மட்டுமன்றி இலங்கை முழுவதற்குமே கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக இக் கல்லூரி உண்மையான கல்வியைப் புகட்டியது மட்டுமன்றி உரிய நற்பணிகளையும் ஆற்றியுள்ளது.

இக்கல்லூரி மாணவர்கள் சேவை புரிவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் சுமார் 60 மாணவர்கள் சில வாரங்களுக்கு முன்னர் தாமாகவே முன் வந்து யாழ். இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தனர். இது மேன்மையான செயலாகும். இதனையிட்டு நாம் பெருமைகொள்ளலாம்."

‘...’ ...ராவிலி...ந்து வள்ளங்களை

# இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும்"

## அரசிடம் யாழ். மாநகரசபைகோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து மரவள்ளமும், பலகையும் இறக்குமதி செய்வதற்கு குருநகர் மீன்பிடி அபிவிருத்திச் சங்கத்திற்கு அரசாங்கம் இறக்குமதி அனுமதி கொடுக்கவேண்டுமென்று யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளது.

மாநகரசபைக் கூட்டத்தில் திரு. யோ. அ. செல்வநாயகம் கொண்டுவந்த இப்பிரேரணை நிறைவேறியது. பிரேரணையின் முழுவிபரம் வருமாறு:-

1952-ம்ஆண்டுக்குமுன் கடற்றொழிலாளர்கள் பாய்மூலம் மீன்பிடித்தொழில் இலங்கை பூராகவும்செய்து வந்தனர். அமரர் ஜீ. ஜீ பொன்னம்பலம் கைத்தொழில், கடற்றொழில் மந்திரியாக இருந்தகாலகட்டத்தில்கடற்றொழில்முன்னேற்றம் கருதி பலநாடுகளுக்குச்சென்று ஆலோசனை நடத்தியதன் பயனை அந்நாடுகளிலிருந்துகடற்றொழிலாககத்துக்குரிய இயந்திரங்களை இலவசமாகப் பெற்று வந்தார். அதை மையமாக வைத்து கடற்றொழிலை இயந்திரமயமாக்குவதென்றும் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க இத்திட்டம் உதவுமென்றும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் ஆரம்பித்தார். ஆனல் இத்திட்டத்தை இலங்கைகற்றவாயுள்ள மீனவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தும் அத்திட்டத்தைக் கைவிடவில்லை. தனது தொகுதிக்கு வந்து யாழ்ப்பாணம் குருநகரில் பரீட்சார்த்தமாய் இயந்திரமயத் திட்டத்தை உருவாக்குவதென உறுதிபூண்டு வெற்றியும் கண்டார்.

இன்று எரிபொருள் விலையேற்றத்தால் மீன்பிடித் தொழில் அழிந்தொழியும்நிலை உருவாகியுள்ளது. ஆகவே 1952-ம் ஆண்டுக்குமுன்இருந்த நிலை உருவாகவேண்டியுள்ளது. இதை அரசாங்கம் கவனித்துக் கெடுத்து மீன்பிடி செய்வதற்கு இந்தியா கேரலத்திலிருந்து ஒரு மரவள்ளமும், பலகையும் இறக்குமதி செய்தது போல் குருநகர் மீன்பிடி அபிவிருத்திச் சங்கத்திற்கு இந்தியாவிலிருந்து வள்ளமும் பலகையும் இறக்குமதிக்கு, இறக்குமதி அனுமதி கொடுக்கவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது".

இதன் பிரதிமீன்பிடி அமைச்சருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும், யாழ். பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்ப வேண்டுமென்று மேலும் தீர்மானிக்கின்றது". (கு)

### சுப்பிரமணியர் தேவஸ்தானம் புனரமைப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மத்துவெளி பாலசுப்பிரமணியர் தேவஸ்தான திருப்பணி வேலைகள் சுமார் மூன்றுலம்சம்ரூபா செலவில் மிக்க துரிதமாக நடைபெற்றுவருகிறது.

தொழிலதிபர் திரு. வி. யோகநாதனின் பெருமுயற்சியால் உருவாக்கப்பட்டுவரும் இத்திருப்பணிவேலைகள் நிறைவுற்றதும் மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு சபைச்செயலாளர் திரு. இ. ...சேகரம்பிள்ளை தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

புங்குடுதீவிலேயே முதன் முதலில் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது இவ்வாலயத்திலேயே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

### 20 பெண்களுக்கு பயிற்சி

(புலோலி)

யாழ்.தெ...றில் திணைக்களம் படித்த வேலையற்றிருக்கும் இளம்பெண்களை சுயதொழிலில் ஈடுபடவைக்கு முகமாகப் பருத்தித்துறையில் தையற் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

பருத்தித்துறை வியாபாரி மூலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தையற் தொழிற்பயிற்சி நிலையத்தில் 20 படித்த வேலையற்ற இளம்பெண்கள் தையற் ... பெற்று... கின்றனர். (கு)

### மின்சாரவசதி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தில் உள்ள ‘கன்னிமார் கோயில் வீதி’, ‘புனித அந்தோனியார் வீதி’ ஆகிய இரு வீதிகளுக்கும் மின்சார வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கான நிதியினை பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் ஒதுக்கியுள்ளார். (கு)

### சிரமதானத்தில் 50 மலசலகூடம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கில் சிரமதானமுறையில் 50 மலசல கூடங்கள் அமைக்கும் பணியில் சிவலப்பிட்டி சனசமூக நிலையத்தினர் ஈடுபட்டுள்ளனர்

இவர்களது பணிக்கு புங்குடுதீவு சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதமும் ஒத்துழைத்துவருகின்றார். (கு)





தமறேன்

அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எல். ஸீ. ...

தமறேன் பல ...

பாவியுங்கள் BAYER தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை
கொழும்பு 10.
தொலைபேசி: 93563

melADS

50 மி. லீட்டர் ரூபா 13-00
200 மி. லீட்டர் ரூபா 42-50
100 மி. லீட்டர் ரூபா 23-00
450 மி. லீட்டர் ரூபா 87-50
4.5 லீட்டர் ரூபா 825-00


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "வெளிவாரிப் பாட்சையை யாழ். நகரிலும் நடத்தவும்"

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிக்கிளையினர் எதிர் வரும் டிசம்பர்மாதம் நடத்த வுள்ள பொதுக்கல்வி தராதரப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படவேண்டும் என்று உயர்கல்வி அமைச்சின் செய லாளர் திரு. ஸ்ரான்லி கல்ப கேயிடம்கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து 600க்கு மேற்பட்டவர்கள் இப் பரீட்சைக்குத் தோன்றுகின்ற போதிலும் கொழும்பு, பேரா தனை, மாத்தறை ஆகிய பல் கலைக் கழகங்களிலேயே நடாத் தப்படுவதால் வெளிவாரிமாண வர்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது என்று திரு. கல்பகேசுக்கு வெளிவாரி மாணவர் கல்விநிலைய இயக்கு னர் திரு நெல்லை நடேஸ் அனுப்பியுள்ள மகஜரில் சுட்டுக் காட்டியுள்ளார்,

கடந்த காலங்களில்பரீட்சை நிலையமாக இருந்த யாழ். பல் கலைக்கழகம்இவ்வருடம் 600க்கு மேற்பட்டவர்கள் தோற்றும் போது அங்கீகரிக்கப்படாதது கவலையளிக்கிறது என்றும் அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது, (கு)

## சதுரங்கக் கழகம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் சதுரங்கக் கழகத்தின் வருடாந்தக் கூட் டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிளாகத் தெரிவாகினர்.

தலைவர்; திரு. நா. செல் லப்பா, உபதலைவர்: திரு. து. துரைராசா, செயலாளர்: திரு. இ. பரதன், உபசெய லாளர், பொருளாளர்: திரு. வை. கணேசலிங்கம். உறுப் பினர்களாக 5 பேரும் தெரி வாகினர். (கு)

## சதுரங்கப் போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாண சதுரங்கக் கழ கத்தின் ஆதரவில் 1980 ம் ஆண்டுக்கான சதுரங்கச் சுற் றுப் போட்டி இம்மாதம் 7-ம் திகதி முதல் நடைபெறவிருக் கிறது.

இவ்வருடம் பாடசாலைகளுக் கிடையிலான போட்டி,பெண் களுக்கான போட்டி யெனத் தனித்தனி நடாத்தவிருக்கி றது. இதற்கான பரிசை கழக அமைப்பாளரும். பொருளா ளருமான திரு. வை. கணேச லிங்கம் வழங்குவார். (கு)

## பற்றிக்ஸ்-ஹென்றிஸ் மோதல்

(அரியாலை)

யாழ். சென் பற்றிக்ஸ்கல் லூரி இளவாலை சென்ற் ஹென்றிஸ் கல்லூரிக்கிடையே யான வருடாந்த உதைபந் தாட்டப் போட்டி யாழ் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற் றது.

மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 3:1 கோல்களா லும் இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 1:0 கோலாலு சென்ற். பற்றிக்ஸ் கோஷ்டி கள் வெற்றி பெற்றன. முத லாம் பிரிவுக்கான போட்டி யில் ஆரம்பம் முதல் இறுதி வரை இருகோஷ்டிகளும் மும் முரமாக விளையாடிய பொழு திலும் இருகோஷ்டிகளும் எதுவித கோலையும் அடிக்காது சமனுகிக் கொண்டன. (கு)

## கிறீஸ்தவ கல்லூரிக்கு வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாணப் பாடசாலைக ளின் விளையாட்டுச் சங்கத் தால் நடாத்தப்படும் உதை பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூ ரியும் சுளிபுரம் விக்டோரி யாக் கல்லூரியும் கலந்து கொண்டன.

கோப்பாய் கிறீஸ்தவ கல் லூரியின் 3ம் பிரிவுக் கோஷ்டி 2:0 கோல்களாலும், 2ம் பிரி கோஷ்டி 1:0 கோல்களாலும் சுளிபுரம் விக்டோரியாக் கல் கோஷ்டியைத் தோற்கடித்தது.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 18-ம் திகதி

(திங்கட்கிழமை)

(3-11-1980)

**மேடம்:** பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தி கிட் டும் தெய்வ நம்பிக்கையில் அதிகஆர்வம்பிறக்கும், நண்ட நாள் மனக்குறை இன்று நிவிர்த்தியாகும், பெரியவர் ஒருவரின் அறிவுரை முன்னேற் றத்தைத்தரும்.

**இடபம்:** தங்கக்குணம்மேலி டும், தக்க மதிப்பும் கிடைக் கும், இனத்தவர்களுடன் தொடர்பு பெருகும், உழைப் பினால் பயனும் உற்சாகமும் பிறக்கும்.

**மிதுனம்:** வசதிகள் பெரு கும், வரவிலும் திருப்தி ஏற் படும், செல்வாக்குப் படைத்த வர்களின் ஆதரவு பெருகும், மக்களால் மகிழ்ச்சியும்கிடைக் கும், சகோதர வழியால் சுக மும் உண்டு.

**கடகம்:** எதிர்பாராத வகை யில் பொருள் விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்கு கள் தோன்றும், மனைவியின் உடல்நலம் சிறிது பாதிக்கப் படலாம், சுகாதாரம் வேண் டும்.

**சிங்கம்:** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்பட லாம், அடக்கத்துடனும் நிதா னத்துடனும் நடந்து கொள் வது நன்று.

**கன்னி:** பேச்சுவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும், பெரிய இடத்துச் சாவகாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும், வரவிலும்உயர்வு காட்டும், சிலருக் அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கும்

**துலாம்:** நினைத்தது நடக் காது, நிம்மதி பறக்கும், நெடும் பயணம் வேண்டாம், இதன் மூலம் பொருள்தவறக் கூடும், அதிக சிந்தனையைத் தவிர்த்து நடக்கவும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு, வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும், தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படும், தாய்வழிச்சுகமும் உண்டு.

**தனுசு:** எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும், சில ருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கும், புத்திரர்களால் புகழ்வந்துசேரும், இன்று கல கலப்பான தினம்.

**மகரம்:** குடும்பத்தில் குறை கேட்க நேரிடும், சிலருக்கு விரக்திமனப்பான்மை தோன் றக்கூடும், கூர்மையான ஆயு தங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** நலன்தரும் நிகழ்ச் சிகள் இடம்பெறும், குடும்பத் தில் மிக்க மகிழ்ச்சியுண்டு, காதலர்களுக்கு இன்று கனி வான நாள், பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும், களஸ் திரவழியால் நன்மை கிட்டும்.

**மீனம்:** தொழிலில் முன் னேற்றம் இன்றுதடைப்படும், ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் மாட்டிவைக்கும், செலவினங் கள் அதிகரிக்கும், சிலருக்கு உஷ்ணரோகமும் ஏற்பட லாம், உணவு விடயத்தில் கவ னம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

(பலாலி)

குளமன்கால் சென் சேவியர் விளையாட்டுக் சழகத்தினல் அகில இலங்கை ரீதி யில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்த விருக்கிறது,

மின்னொளியில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டி செற்- அப்போட்டி, ஓவர்கேம் 6 வீரர், ஓவர்-கேம் 4வீரர் போட்டி என மூன்று வகை யாக நடாத்தப்படும்.

குளமன்கால் சென்சேவியர் விளையாட்டுக் சழகத்தின் 4வது ஆண்டு நிறைவு விழா வை யொட்டி நடைபெறும் இச் சுற்றுப்போட்டியில் வெளி மாவட்டங்களில் இருந்தும் அனேக கழகங்கள் பங்குபற்று மென எதிர்பார்க்கப்படுகிறது.

## வருடாந்த உதைபந்தாட்டம்

(அரியாலை)

யாழ். பரி.யோவான் கல் லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி உதைபந் தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையே வருடாந்த உதை பந்தாட்டப் போட்டி யாழ். பரி. யோவான் கல்லூரிமைதா னத்தில் நடைபெற்றது.

முதலாவது பிரிவுக்கான போட்டியில் மகாஜனக் கல் லூரி 6:0 கோல்களால் வெற்றி பெற்றது. இரண்டாம் பிரி வுக்கான போட்டியில் 1:0 கோலாலும், மூன்றும் பிரிவுக் கான போட்டியில் 3:0 கோல் களாலும் பரியோவான் கல் லூரிக் கோஷ்டிகள் வெற்றி பெற்றன. (கு)

## கொக்குவில் இந்துவென்றது

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக் கல்லூ ரிக்கும் வைத்தீஸ்வரா வித்தி யாலயத்திற்கும் இடையில் நடைபெற்றஉதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந் துக்கல்லூரி வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலாம், இரண்டாம் பிரிவு 2-0 கோல் களாலும், இரண்டாம் பிரிவு 4-0 கோல்களாலும் வெற்றி யீட்டியது. (கு)

## குடிகாரர் தொல்லை

(மன்னூர்)

மன்னூர் பஸ்நிலைய வட்டா ரத்திலும் கடைவீதி முன் பகுதியிலும் குடிகாரர்களின் சச்சரவு அடிக்கடி நடைபெற்று வருகிறது. கடைவீதி வட்டா ரத்திலும் குடிகாரரின் தொல்லை மீண்டும் ஆரம்பித் துள்ளதால் இரவுநேரத்தில் கடைவீதிக்குச் சென்றுவரும் மக்கள் மிகவும் பயத்துட னேயே சென்று வருகிறர்கள்.


75-வது நாளை நாக்கி விறுநடைபோடுகிறது

ராணி - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா

சட்டம் என் கையில்

(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

(யாழ்ப்பாணம்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்

LUCKY LADY

எதிர்பாருங்கள்

ஒரேவானம் ஒரேபூமி

வெலிங்டன் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி-ஜெயலலிதா தாய்

லிடோ (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் ஹிரகப்பிரவேசம்

வசூலில் பெரும் சாதனை! வெற்றி 6-வது வாரம்

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்மன் கலர்)

வெற்றி முழக்கமிடும் 5-வது வாரம்

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்

ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா

பி எஸ் விரப்பா-நம்பியார் நடித்த

மீனவ நண்பன்

சாந்தி யாழ்நகர்- தினசரி 4 காட்சிகள்

வெற்றி...! வெற்றி!! மாபெரும் வெற்றி !!!

நீயா?

100 நாட்களில் வசூலில் 7 லட்சத்திற்குமேல்!

வெள்ளிவிழா வண்ணச் சித்திரம்

ரசிகர்கள்காட்டும் பேராதரவு காரணமாக தீபாவளி திரைவிருந்தாகவும் காட்சியளிக்கும்

7-11-80— "THE DIRTY DOZEN" color

WINDSOR

(JAFFNA) DAILY 5 SHOWS

Daily at 10-30 A.M., 2 00, 4-30, 7-00 & 9-30P.M. only

தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறை யில் 28 வருடங்கள் வாழ்கிறுன் ஒரு கணவன். கணவ னைச் சிறைக்கு அனுப்பியது பேரனின் சூழ்ச்சி என் பதை மனைவி உணர்கிறுள், அன்பும், பண்பும் பதிபக்தி யும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிறுள். இருந்தும் வீரதீரசூரன் புருஷன் ஒருவனுல் மாத் திரம் அவனை மீட்க முடிகிறது.

CHARLES BRONSON ROBERT DUVALL, JILL IRELAND

in

"BREAK OUT"

Jailed for a crime he never committed Only Charles Bronson can get him out!

Adults. Color Action.

ஹரன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சரோஜாதேவி

ஆடிப்பெருக்கு

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30

சிவாஜி — பத்மினி

மரகதம்

நாகம்ஸ் (சுன்னகம்) தினசரி 6-30, 9-30 சனி-ஞாயிறு 2-45

வீரகனல்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும் கல்லூரிகளுக்கான கம்பன்விழா நாளை செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் செல்வி க. ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி

Seat Work in English-7 Rs 7-75
NEW METHOD
Seat Work in English-5 Rs 5-00
Seat Work in English-4 Rs 3-25
Seat Work in English-3 Rs. 2-50

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். நகரில்

# 2 கோடி ரூபா செலவில் நாவலருக்கு மணிமண்டபம்

## அமைச்சர் 'இராசு' தகவல்

(கொழும்பு)

"இந்துக் கோவில்களில் சிவாச்சாரியார்களின் பற்றுக்குறையைநீக்க எனது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது. அதற்காக திருக்கேதீஸ்வரத்தில் குருகுலம் அமைத்து இவர்களுக்குப் பயிற்சியளிப்பதுடன், மொரீஷியஸ் போன்ற கடல் கடந்த இந்துக்கள் வாழும் நாடுகளுக்கும் சிவாச்சாரியார்களை அனுப்பி வைப்போம். தமிழுக்கும், சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலருக்கு யாழ் நகரில் மணிமண்டபம் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் கொடுத்துள்ளது. இதற்காக இரண்டுகோடி ரூபாவையும் ஒதுக்கியுள்ளது."

மேற்கண்டவாறு கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவப் பிரிவின் இந்து மாமன்றம் நடத்திய கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச அபிவிருத்தி இந்துகலாச்சார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அமைச்சர் திரு. இராசதுரை மேலும் பேசுகையில் "எமது முன்னோர்கள் தாய்-தந்தை, குரு ஆகியோர்களுக்கு மதிப்பளித்து போற்றி வந்தனர். இன்று இந்தநிலை அருகிவருகிறது. "தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" என்ற வாக்கியத்திற்கிணங்க நாம் தாய்மையைப் போற்றி வாழப்பழகிக் கொள்ள வேண்டும். முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்களோ, அதற்கிணங்க நாமும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்" என்றார்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சித்த போதனா பீடத்தலைவர் வைத்திய கலாநிதி சிறிகாந்தா அருணாசலம் ஆசியுரைவழங்குகையில் குறிப்பிட்டதாவது: 'இறைவன் ஆதியும், அந்தமும் இல்லாதது போல ஆயுள்வேதமும் ஆதியும், அந்தமும் இலாதது. இத்தகைய சிறப்புப் பெற்ற மருத்துவம் குறுகிய நோக்கம் கொண்டதல்ல சுகவாழ்வும், நீடூழி வாழ்வும் கொண்டதாகவும் கருதலாம். இவை மனிதனின் வாழ்வுக்கு அத்தியாவசியமானது. எனவே இம் மருத்துவம் இதனுடன் நின்றுவிடாது உலகிற்கும் தொண்டாற்ற வேண்டுகிறேன். சாஸ்திரம் என்ற இந்த ஆயுள் வேதத்தை அறிய வேண்டுமானால் ஏனைய சாஸ்திரங்களையும் அறிய வேண்டுமானால் ஏனைய சாஸ்திரங்க அறிவு எங்கிருந்து வந்தாலும் சரி, அதை பயபக்தியுடன் ஏற்று மக்களின் சுபீட்சத்திற்குப் பயன் படுத்த வேண்டும்' என்றார்.

வைத்திய கலாநிதி பிரம்மஸ்ரீ சண்முகரத்தின குருக்களின் பூசை ஆராதனையுடன் ஆரம்பமான இவ்விழாவில் "இதில் என்ன சந்தேகம்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி சண் தலைமையில் கவியரங்கம் ஒன்றும் இடம் பெற்றது. இதில் திரு. வீ. ரீ. தமிழ்மாறன், திரு. எம். தயாளன், திரு. கே. சத்தியன், திரு. சோம. சபா, திரு. என். கே. சண்முகநாதபிள்ளை ஆகியோர் பங்குபற்றினர்.

விழாவின் இறுதியில் திருமதி விஜயாம்பிகை இந்திரகுமாரின் மாணவிகளின் பரதநாட்டியமும், கதாகாலட்சேபம், நாடகம் என்பனவும் இடம் பெற்றன. தி. பீ. பிரபாகரன், மன்றச் செயலாளர் திரு. எஸ். சரவணமுத்து உட்பட பலர் உரையாற்றினர். (பலா நிருப)

## சிறிமா 22ம் திகதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...கப்படுகிறது.

இம்மாதம் 22-ம்திகதி மாலை யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் திருமதி சிறிமாவோ கலந்துகொண்டு உரையாற்றுவார். தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பு இக் கூட்டத்தை ஒழுங்கு செய்து வருகிறது.

தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், இலங்கை கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு என். சண்முகதாசன், சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஸ் குணவர்த்தனா ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

வேலைநிறுத்தத்தால் வேலை இழந்தோர் பிரச்னை, வாழ்க்கைச்செலவு உயர்வு, அத்தியாவசியச் சேவைச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் திருமதி சிறிமாவின் குடியியல் உரிமை பறிப்பு ஆகியவற்றை முன்வைத்து யு. என். பி. அரசைக் கண்டிக்கும் வகையில் இக் கூட்டம் நடைபெறும்.

கொழும்பிலிருந்து வரும் கட்சித் தலைவர்களுக்கு யாழ். நகரில் அமோக வரவேற்பளிக்கவும், பொதுக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தவும் துரித நடவடிக்கை மேற்கொள்வது என ஐந்து கட்சிகள் கூட்டமைப்பின் நடவடிக்கைககுழு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் சனி மாலை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் ஐந்து கட்சிகள் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழுக் கூட்டம் திரு. மாவை சேனாதிராசா தலைமையில் கூடி பொதுக்கூட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது.

பொதுக்கூட்டத்தை யொட்டி மாபெரும் ஊர்வலமொன்றை நடத்தப் பொலிசாரிடம் அனுமதி கோரப்படவிருக்கிறது.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபின் 23ம் திகதி அனுராதபுரத்திற்கு திருமதி சிறிமாவும் மற்றும் தலைவர்களும் செல்வரெனத் தெரிகிறது. (அ)

## இருட்டடிப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற இவ்விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

"அந்நியர்களையும் அந்நியர்களையும் எதிர்த்துப் போராடிய வரலாற்றுப் பெருமைமிக்க வீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு வீரஅஞ்சலிசெலுத்துவது தமிழரின் பாரம்பரிய மரபாகும் இதையொட்டி எடுக்கப்படும் இத்தகைய விழாக்களின் மூலம் மகாவம்சம் போன்ற சரித்திர இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள தமிழ் வீரமன்னர்களை நினைவில் மீட்டு அவர்களின் பண்பாடு, வரலாறுகளை எமது இளம் சந்ததியினருக்குப் புரிய வைத்தலே இத்தகு விழாக்களின் முக்கிய நோக்கமாகும் இத்தகைய வீர வரலாறுகள் இன்றைய ஆட்சிமுறையில் கல்வி முறையில் இருந்து எமது இளஞ்சந்ததியினருக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தினரால் நினைவுகூரப்படும் தேசிய வீரர்களின் பட்டியலில் பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற வரலாற்றுப் பெருமைமிக்க வீரர்கள் இடம் பெறவில்லை. சுதந்திரத்திற்காகவும் மண்ணின் பெருமையைக் காப்பதற்காகவும் இறுதிவரை அயராமல் போராடிய தமிழர்களை மன்னர்களை அரசு அலட்சியம் செய்துள்ளது.

"துட்டகைமுனு எல்லாளன் வரலாறு எங்களுக்குப் புலப்படுத்துவது, ஆதிகாலந்தொட்டு இந்த நாட்டில் இருவேறு தனித்தனியான தேசிய இனங்கள் இருந்து வந்துள்ளன என்பதேயாகும் இந்நாட்டின் அத்தகைய வரலாறுகளே, அந்நியரை எதிர்த்துச் சுதந்திரத்திற்காக முழுமூச்சுடன் போராடியவர்கள் தமிழர்களே என்றும் தெரிவிக்கின்றன. அத்தகைய தமிழ் மன்னர்களைக் காட்டிக் கொடுத்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதில் இருந்து நாமுணரவேண்டியது ஒன்று உள்ளது. துரோகத்திற்கு இடம்கொடுக்காமல் நாம் எமது ஒற்றுமையைக் கட்டிக்காத்தல் வேண்டும்.

அப்போதுதான் எமது முதாதையர்கள் கட்டிக் காத்த எமது மண்ணை மீட்டு, தன் பெருமைகளைப் பாதுகாக்கவும் முடியும்" என்றார்.

## டாக்டர் கனகரத்தினம் மறைவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இளைப்பாறிய சுகாதார அதிபர் டாக்டர் க. கனகரத்தினத்தின் மரணச் சடங்குகள் நேற்றுக் காலை கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இம்மரணசசடங்கில் வட பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. பி. மகேந்திரன், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மற்றும் எம். பிக்கள். டாக்டர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், கல்விமான்கள், உட்பட ஏராளமானவர் கலந்து கொண்டு அஞசலி செலுத்தினர்.

மரணச்சடங்குகள் சைவ அனுட்டானமுறைப்படி நடைபெற்றது. காலை 10 மணியளவில் அன்னாரது பிரேத ஊர்வலம் அவரது இல்லத்திலிருந்து ஆரம்பமாகி கோம்பையன் மணல் மயானத்தைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கண்ணீர் மல்கக் கலந்து கொண்டனர். ஊர்வலம் கோம்பையன்மணல் மயானத்தை அடைந்ததும் அன்னாரது பூதவுடல் சிதையில் வைக்கப்பட்டு தீமூட்டப்பட்டது. (கொ)

## படகு சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிற்கும் - கல்முனைக்கும் இடையே உள்ள வாவியில் அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்குப் பிராந்திய சபையினர் படகு சேவை ஒன்றை நடாத்தவுள்ளனர்.

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## மக்கள் கடையை மேற்பார்வை செய்வார்கள்

(வேலணை)

வர்த்தக கப்பல்துறைப் பிரதி அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் வேலணையிலுள்ள விற்பனைத் திணைக்கள மக்கள் கடையின் மேற்பார்வையாளராக 5 பேரை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நியமித்திருக்கின்றார்.

திருவாளர்கள் சோ. நந்தையா, சி. சந்திரசேகரம், இ. துரைராசா, வா. தவச்செல்வம், செ. சுந்தரலிங்கம் ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களாவர். (ஏ)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை செல்லமுத்து

யாழ்ப்பாணம் இல.13, வெள்ளாந்தெருவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (பென்சனியர்) விசாலாட்சி ஆகியோரின் புத்திரியும், கணபதிப்பிள்ளை (சின்னத்தம்பி)யின் (முன்னாள் சிமெந்துக்கூட்டுத்தாபன ஊழியரும், டைனமோ மோட்டோர் வைண்டிங் உரிமையாளரும்) அன்புமனைவியும், மகாதேவா, சரவணபவா (குட்டி) ஆகியோரது அருமைத் தாயாரும், கிருகஸ்பதியின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தம்பிராசா, காலஞ்சென்ற இராசம்மா, செங்கமலம், திபாகராசா (வீரபாகு) (பரந்தன் சாயன கூட்டுத்தாபனம்), தவராசா (துரை அன்கோ உரிமையாளர்) ஆகியோரது சகோதரியும் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியின் மைத்துனியுமாவார் அன்னாரது தகனக்கிரியைகள் (3-11-80) இன்று பிற்பகல் 2 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

7248

— குடும்பத்தினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper ... Telegrams Eelanaadu, Phone 389 ... B. No 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org